பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 30 | செவ்வாய்க்கிழமை | 03.06.2025 | அதிர்வு 303

## கொவிட் குறித்து விசேட அவதானம்

**சுகாதார அமைச்சு அறிவிப்பு**



“இலங்கையில் அதிகரித்துள்ள நோய் நிலைமைகள் தொடர்பில் சுகாதார அமைச்சால் உரிய நடவடிக்கை

06



# செம்மணிப் புதைகுழியில் சிறுவர்கள், பெண்கள் என அதிக எலும்புக்கூடுகள்!

**அடித்தே கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம்**

(ந.லோகதயாளன்)

யாழ். செம்மணி மனிதப் புதை குழியில் நேற்று வரை 7 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த இடத்தில் சிறுவர்கள், பெண்கள் என அதிக மனித எலும்புக்கூடுகள் இருப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன என்று அஞ்சப்படுகின்றது.

07

**உறுப்பினர்களை விலைக்கு வாங்கி**

## கொழும்பு மாநகர சபையை கைப்பற்ற என்.பி.பி. முயற்சி

**ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளருக்கும் மொட்டு ஆதரவு வழங்காது என்றும் சாகர தெரிவிப்பு**

“ஊழலை இல்லாதொழிப்பதாகக்குறிப்பிட்டுக்கொண்டுஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, உறுப்பினர்களை விலைக்கு வாங்கி கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைக்க முயற்சிக்கின்றது.”

– இவ்வாறு

06






பொதுத் தேர்தல் சமயம் தமிழர் தரப்பு அரசியலிலும் அதிகம் பேசப்பட்ட விடயங்களில் ஒன்று மதுபான சாலைகளுக்கு உரிமம் கொடுத்த விவகாரமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசியல் தரப்புகளுக்கு அவர்கள் கோடிக்கணக்கான ரூபாக்களை சுருட்ட வகை செய்யும் விதத்தில் அரசியல் லஞ்சமாக இந்த பார் லைசென்ஸ்கள் வழங்கப்பட்டன என்பதுதான் அப்போதைய குற்றச்சாட்டு.

தாங்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்ததும், அது பற்றிய விடயங்களை அம்பலப்படுத்துவோம் என்று கூறிய அநுர குமார திஸநாயக்கவும் சகாக்களும், இப்போது ஆட்சி அதிகாரங்களை முழுமையாகக் கைப்பற்றிய பின்னரும், அந்த விவகாரத்தை மூடி மறைத்து சம்பவம் பண்ணுகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்தப் பெரும் ஊழல் தொடர்பில் அப்போதே போடப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் இப்போது

06

# யாழ் மாநகர மேயர் தேர்வு எதிர்வரும் 13ஆம் திகதி

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் தேர்வு எதிர்வரும் 13ஆம் திகதி இடம்பெறுவதற்கு வர்த்தமானி அறிவித்தலிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஏதேனும் தரப்பு தனித்து அறுதிப் பெரும்பான்மை பெற்ற சபைகள் தவிர்ந்த ஏனைய சபைகளிற்கான முதல்வர் மற்றும் தவிசாளர் தேர்வு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெறும். இதற்கமைய வடக்கு மாகாணத்தில் உள்ள 34 சபைகளில் 3 சபைகளை தமிழ் அரசுக் கட்சி அறுதிப் பெரும்பான்மையில் வெற்றியீட்டியதன் அடிப்படையில் சுயமாக நிர்வாகத்தை அமைத்துக் கொண்டனர்.

இதேபோன்று எஞ்சிய 31 சபைகளும் உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெறுவதற்கான திகதி நேர அட்டவனை என்பன வர்த்தமானி அறிவித்தலிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாநகர சபையை தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 17 சபைகளிற்கும் திகதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

| தொ. இல. | உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | திகதி | நேரம் | கூட்டப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் மாநகர சபை | 13.06.2025 | மு.ப.8.30 | யாழ்ப்பாணம் மாநகர சபை சபா மண்டபம். |
| 2. | நல்லூர் பிரதேச சபை | 13.06.2025 | பி.ப.12.30 | நல்லூர் பிரதேச சபை சபா மண்டபம். |
| 3. | சாவகச்சேரி நகர சபை | 13.06.2025 | பி.ப.03.00 | சாவகச்சேரி நகர சபை சபா மண்டபம். |
| 4. | வவுனியா மாநகர சபை | 16.06.2025 | மு.ப.09.00 | வவுனியா மாநகர சபை சபா மண்டபம். |
| 5. | வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை | 16.06.2025 | பி.ப.02.00 | வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை சபா மண்டபம். |
| 6. | பருத்தித்துறை நகர சபை | 17.06.2025 | மு.ப.08.30 | பருத்தித்துறை நகர சபை சபா மண்டபம். |
| 7. | பருத்தித்துறை பிரதேச சபை | 17.06.2025 | மு.ப.11.30 | பருத்தித்துறை பிரதேச சபை சபா மண்டபம். |
| 8. | வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபை | 17.06.2025 | பி.ப.02.30 | வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 9. | வல்வெட்டித்துறை நகர சபை | 18.06.2025 | மு.ப.08.30 | வல்வெட்டித்துறை நகர சபை சபா மண்டபம். |
| 10. | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | 18.06.2025 | மு.ப.11.30 | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 11. | வலிகாமம் வடக்கு பிரதேச சபை | 18.06.2025 | பி.ப.02.30 | வலிகாமம் வடக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 12. | காரைநகர் பிரதேச சபை | 19.06.2025 | மு.ப.08.30 | காரைநகர் பிரதேச சபை சபா மண்டபம். |
| 13. | வலிகாமம் மேற்கு பிரதேச சபை | 19.06.2025 | மு.ப.11.30 | வலிகாமம் மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 14. | வலிகாமம் தெற்கு பிரதேச சபை | 19.06.2025 | பி.ப.02.30 | வலிகாமம் தெற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 15. | ஊர்காவற்றுறை பிரதேச சபை | 20.06.2025 | மு.ப.08.30 | ஊர்காவற்றுறை பிரதேச சபை சபா மண்டபம். |
| 16. | வேலணை பிரதேச சபை | 20.06.2025 | மு.ப.11.30 | வேலணை பிரதேச சபை சபா மண்டபம். |
| 17. | வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை | 20.06.2025 | பி.ப.02.30 | வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 18. | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை | 23.06.2025 | மு.ப.09.00 | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை சபா மண்டபம். |
| 19. | சாவகச்சேரி பிரதேச சபை | 23.06.2025 | பி.ப.02.00 | சாவகச்சேரி பிரதேச சபை சபா மண்டபம். |
| 20. | மன்னார் பிரதேச சபை | 24.06.2025 | மு.ப.08.30 | மன்னார் பிரதேச சபை சபா மண்டபம். |
| 22. | மாந்தை மேற்கு பிரதேச சபை | 24.06.2025 | பி.ப.02.30 | மாந்தை மேற்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 23. | நானாட்டான் பிரதேச சபை | 25.06.2025 | மு.ப.08.30 | நானாட்டான் பிரதேச சபை சபா மண்டபம். |
| 24. | முசலி பிரதேச சபை | 25.06.2025 | மு.ப.11.30 | முசலி பிரதேச சபை சபா மண்டபம். |
| 25. | வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை | 25.06.2025 | பி.ப.02.30 | வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை சபா மண்டபம். |
| 26. | கரைதுறைப்பற்று பிரதேச சபை | 26.06.2025 | மு.ப.08.30 | கரைதுறைப்பற்று பிரதேச சபை சபா மண்டபம். |
| 27. | துணுக்காய் பிரதேச சபை | 26.06.2025 | மு.ப.11.30 | துணுக்காய் பிரதேச சபை சபா மண்டபம். |
| 28. | மாந்தை கிழக்கு பிரதேச சபை | 26.06.2025 | பி.ப.02.30 | மாந்தை கிழக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 29. | வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை | 27.06.2025 | மு.ப.09.00 | வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை சபா மண்டபம். |
| 30. | வவுனியா வடக்கு பிரதேச சபை | 27.06.2025 | பி.ப.02.00 | வவுனியா வடக்கு பிரதேச சபை சபா மண்டபம். |
| 31. | நெடுந்தீவு பிரதேச சபை | 30.06.2025 | மு.ப.11.30 | நெடுந்தீவு பிரதேச சபை சபா மண்டபம். |






# வவுனியாவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம்

(கி.வசந்தன்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வவுனியாவில் உள்ள நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள் மற்றும் விகிதாசார உறுப்பினர்கள் கலந்துகொண்டு தமது சத்திய பிரமாணத்தை மேற்கொண்டனர்.

சத்தியபிரமாண நிகழ்வு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கூட்டணியின் செயலாளர் நாகலிங்கம் ரட்ணலிங்கம், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் முக்கியஸ்தரான க.சந்திரகுலசிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பேச்சாளர் க.துளசி, தமிழீழ விடுதலை இயக்கம் சார்பில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியவர்களின் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வெற்றிபெற்ற உறுப்பினர்கள், கூட்டணி கட்சிகளின் ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருத்தனர்.
























# கொவிட் நிலைமையைச் சமாளிக்க அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விசனம்

"இலங்கையில் அத்தியாவசிய மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதற்கிடையில், கொவிட் புதிய திரிபும் பரவி வருகின்றது. இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு அரசிடம் எந்த முன்னாயத்தத் திட்டங்களும் இல்லை."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம் வெளியிட்டுள்ளார்.

விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு விசனம் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"தற்போது நாட்டில் பல்வேறு மருந்துகளுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகின்றது. சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவில் 180 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. வைத்தியசாலை கட்டமைப்பில் மேலும் 50 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவற்றில் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள், வலி நிவாரணிகள், இன்சுலின், இதய நோய் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களும் உள்ளடங்குகின்றன. இது தொடர்பில் நாம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போதிலும், அரசிடம் இருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினைக்கான தீர்வையும் அரசு முன்வைக்கவில்லை.

எல்.பி. 8.1 எனப்படும் கோவிட் மாதிரிகளின் துணை மாறுபாடு தற்போது சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா மற்றும் ஹொங்கொங்கில் பரவி வருகின்றது. இந்தத் துணை வகை மாறுபாடுகள் குறித்து நமது நாட்டில் எந்தவித பரிசோதனைகளும் நடைபெறுவதாகக் காண முடியவில்லை. இந்தத் துணை மாறுபாடு திரிபுகள் தொடர்பாக எமது நாட்டிலும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மருத்துவமனைகளில் இதனுடன் தொடர்புடைய அறிகுறிகளுடன் இருக்கும் நோயாளர்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும். இந்நிலைமையில் தற்போது சின்னம்மை நோயும் அதிகரித்துள்ளது. இந்த நோய்க்கு ஆகக் குறைந்தது 6 வாரங்களாவது தொடர்ச்சியாகச் சிகிச்சையளிக்க வேண்டும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கும் முறையான திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்." – என்றுள்ளது.

# ஊழல், மோசடி அரசியல்வாதிகள் நாட்டைவிட்டுத் தப்பியோட முயற்சி

## தென்னிலங்கை ஊடகம் தகவல்



இலங்கையில் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள சில அரசியல்வாதிகளும், அவர்களின் உறவினர்களும் நாட்டைவிட்டுத் தப்பியோடுவதற்கு முற்படுகின்றனர் என உளவுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சில அரச அதிகாரிகளும் இவ்வாறு வெளியேற முற்படுகின்றனர். எனினும், அத்தகையவர்கள் வெளியேறுவதை தடுப்பதற்கு விமான நிலைய அதிகாரிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அரசு உரிய ஆலோசனையை வழங்கியுள்ளது.

அத்துடன் புலனாய்வுப் பிரிவினரும் இந்த விடயத்தில் துரித கதியில் செயற்பட்டு வருகின்றனர் என்றும் அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.




# சுற்றுலாப் பயணிகள் வருகை கடந்த மாதத்தில் அதிகரிப்பு

கடந்த மாதம் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 120,120 ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் மூலம், 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,017,004 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இந்தியாவிலிருந்து 42,899 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும், இது மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 35.7 வீதம் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# அவுஸ்திரேலிய துணை பிரதமர் இன்று இலங்கைக்கு வருகிறார்

அவுஸ்திரேலியாவின் துணை பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அவுஸ்திரேலிய பிரதி பிரதமர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரை சந்திக்கவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுடனான இருதரப்பு கலந்துரையாடலிலும் அவர் ஈடுபடவுள்ளார்.

இந்த விஜயமானது இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு துறைசார் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



# சீரற்ற வானிலையால் 70,023 முறைப்பாடுகள்



மழையுடனான வானிலையால் மின்தடை தொடர்பில் 70,023 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

நேற்று காலை 8 மணி வரையான காலப்பகுதி வரை 50,423 பேருக்கான மின் விநியோகம் வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியிலாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவித்தார்.

நாட்டில் நிலவிய பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக மின் துண்டிப்பு ஏற்பட்ட 70 வீதமான இடங்களுக்கான மின் விநியோகம் வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசாரணைக்கு வந்திருக்கின்றன. அது பற்றி கடந்த வாரமும் என் பத்தியில் கோடி காட்டி இருந்தேன்.

நேற்றும் இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஜனக் டி சில்வா, சோபித ராஜகருண, சம்பத் விஜேரத்னா ஆகியோர் முன்னிலையில் தொடர்ந்து விசாரிக்கப்பட்டது.

அச்சமயம் அது விடயமாக கூறப்பட்ட இரண்டு அம்சங்கள் முக்கியமானவை.

நான்கு மனுதாரர்களில் ஒரு தரப்பு மேற்படி மதுச்சாலை உரிமம் பெற்ற ஒருவருக்கு அந்த உரிமம் வழங்கப்படுவது தொடர்பாகக் கலால் திணைக்களத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி ஒன்றை நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. அந்தக் கடிதத்தில், அக்கடிதத்தின் பிரதி, யாழ்ப்பாணம் எம்.பி. ஒருவருக்கு அனுப்பப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை அத்தரப்பு சுட்டிக்காட்டியது.

அந்த எம்.பிக்கும் இந்த லைசென்ஸ் வழங்கும் நடவடிக்கைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றால் அந்த கடிதத்தின் பிரதி அந்த எம்.பிக்கு அனுப்பப்பட்டது ஏனென்று அந்த மனுதாரர் தரப்பு நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பியது. இது தொடர்பில், இந்த விவகாரத்தை குற்ற விசாரணைப் பிரிவிடம் கையளித்து, புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு, உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதேசமயம் இந்த வழக்கை ஒட்டி, கடந்த ஆண்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது, அச்சமயம் கலால் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக இருந்தவர் கடித உறைக்குள் சீல் இட்டு, நீதிமன்றத்திற்கு உரிய இரகசிய ஆவணம் என்ற பெயரில் ஒரு விடயத்தை சமர்ப்பித்திருந்தார் என்று கடந்த வாரம் குறிப்பிட்டு இருந்தேன்.

அத்தகைய ஆவணத்தின் பிரதி தங்களுக்குத் தரப்படாமல், தாங்கள் இருட்டில் இருந்து கொண்டு இந்த விவகாரத்தில் சட்ட விவாதத்தை நடத்த முடியாது என்று மனுதாரர் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நேற்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

இதனை அடுத்து, இந்த ஆவணத்தின் பிரதிகளை மனுதாரர்கள் தரப்புக்குக் கையளிக்கலாமா என்பதை தற்போதைய கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடம் கேட்டு, விசாரித்து, நீதிமன்றுக்குத் தெரிவிக்கும்படி நீதியரசர்கள் அரச சட்டத்தரணியிடம் நேற்றுக் கூறினர்.

தாங்கள் இவ்விடயம் குறித்து ஏற்கனவே தற்போதைய கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடம் விசாரித்து விட்டனர் என்றும், அந்த இரகசிய அறிக்கையில் அல்லது ஆவணத்தில் முன்னைய கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் என்ன விடயத்தை சமர்ப்பித்திருக்கிறார் என்று தங்களுக்கு எதுவுமே தெரியாது என்றும், கலால் திணைக்கள அலுவலகத்தில் கூட அத்தகைய இரகசிய அறிக்கையொன்று உயர் நீதிமன்றத்திற்கு அப்போதைய ஆணையாளர் நாயகத்தினால் கையளிக்கப்பட்டமை தொடர்பான எந்த பதிவும் இல்லை என்றும், தற்போதைய ஆணையாளர் நாயகம் தங்களுக்கு தெரிவித்தார் என அவர் தரப்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

அப்படியானால் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்பு கொண்டு, சீல் இட்டு இரகசிய ஆவணமாக ஒப்படைக்கப்பட்ட அந்த தஸ்தாவேஜைப் பெற்றுக் கொண்டு, அதனைக் கலால் திணைகளத்தின் தற்போதைய ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பித்து, அவரது சம்மதத்தோடு அதன் பிரதிகளை மனுதாரர்களுக்கு கையளிக்கலாமா என்பதை வரும் வியாழக்கிழமை இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கும் போது தெரிவிக்கும்படி நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

சம்பந்தப்பட்ட இரகசிய ஆவணம் மனுதாரர் தரப்புக்கு கிடைக்கும் போது, சில சமயங்களில் இந்த மதுச்சாலை உரிமம் வழங்குவதில் கோடிகள் உழைத்த அல்லது அவற்றை அரசியல் லஞ்சமாக தாங்கள் பரிந்துரைத்தவர்களுக்கு அரசைக் கொண்டு வழங்க செய்து, அதன் மூலம் கோடிகள் சுருட்டிய எம்.பிக்களின் விவரம் சில சமயங்களில் தெரிய வரலாம் எனக் கருதப்படுகிறது. அதை அறிய வரும் வியாழக்கிழமை வரை நாம் காத்திருக்க வேண்டும்.

\+ + +

இந்த அரசியல் சந்தடிகள், களேபரங்களுக்கு மத்தியில், தமிழரசு கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நாளை திருகோணமலை மாவட்ட நீதிமன்றுக்கு வருகின்றது.

சுமந்திரன், சிறிதரன் உட்பட இந்த வழக்கின் எதிராளிகள் நீதிமன்றுக்கு சமுகம் தருபவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களில் ஒருவராகக் குறிப்பிடப்பட்ட கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா காலமாகி விட்டமையால், அவரது மரணச் சான்றிதழைச் சமர்ப்பித்து, அவரது இடத்துக்கு பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை இந்த வழக்கில் எதிர்மனுதாரராகச் சேர்த்துக் கொள்வதா என்பது குறித்து நீதிமன்றம் நாளை தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு வழக்கு ஒத்திவைக்கப்படலாம்.

\+ + +

நாடாளுமன்றத் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும், இப்போது உள்ளூராட்சித் தேர்தலிலும் முன்னணிக்கு வந்தது தேசிய மக்கள் சக்தி.

இப்போது உள்ளூராட்சித் தேர்தலில் அதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் எல்லாம் ஆங்காங்கே ஒன்று திரண்டு, ஓர் அணியாக நின்று, தேசிய மக்கள் சக்தியை உள்ளூராட்சி நிர்வாகங்களை அமைக்க விடாது முறியடிப்பதற்காக தற்காலிகக் கூட்டுக்களை அமைத்து வருகின்றன.

அதுதான்வடக்கு-கிழக்கிலும்நடக்கின்றது என்கிறார் அன்பர் ஒருவர்.

வடக்கு, கிழக்கில் தேர்தலில் முதலாம் இடம் தமிழரசுக்கு. இரண்டாம் இடம் தேசிய மக்கள் சக்திக்கு. மூன்றாம் இடம் சங்குக்கு. நான்காம் இடம் சைக்கிளுக்கு.

தென்னிலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்ற தேசிய மக்கள் சக்தியை வீழ்த்துவதற்கு அடுத்து வந்த நிலையில் உள்ள கட்சிகள் தமக்குள் ஒன்றிணைவது போல, வடக்கு, கிழக்கிலும் முன்னணிக்கு வந்த தமிழரசை வீழ்த்துவதற்கு மூன்றாம், நான்காம் இடங்களில் வந்த கட்சிகள் நேற்று முதல் தங்களுக்குள் இணைந்திருக்கின்றன. இரண்டாவது வந்த கட்சி பின்புலத்திலிருந்து அந்த நகர்வுகளுக்கு ஆதரவு தருவதாகக் கூறப்படுகிறது.

ஆக அந்த அன்பரின் கூற்றுப்படி தெற்கில் நடப்பதுதான் வடக்குக் கிழக்கிலும் நடக்கின்றது.

முதலாவது வந்த தரப்பை வீழ்த்த, அடுத்து வந்தவை தங்களுக்குள் இணைவது வழமைதான்...!

---

## கொழும்பு மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

"ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் முன்மொழியும் மேயர் வேட்பாளருக்கு நாங்கள் ஆதரவு வழங்கப் போவதில்லை." - என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வாழ்க்கைச் சுமை சடுதியாக உயர்வடைந்துள்ளது. தேசிய மக்கள் சக்தி தேர்தல் பிரச்சார மேடைகளில் வாழ்க்கைச் செலவுகள் பற்றி தீவிரமாகப் பேசியது. ஆட்சிக்கு வந்தவுடன் வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதாகக் குறிப்பிட்டது. ஆனால், இதுவரையில் வாழ்க்கைச் செலவுகள் குறைக்கப்படவில்லை.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எவ்வித திட்டங்களையும் அரசு முன்வைக்கவில்லை. நிறைவடைந்துள்ள 6 மாத காலத்தில் பொருளாதார மேம்பாடு மற்றும் விருத்திக்கான நடைமுறைக்குச் சாத்தியமான புதிய கருத்திட்டங்கள் ஏதும் ஆரம்பிக்கப்படவில்லை. இவ்வாறான பின்னணியில் எவ்வாறு நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும்.

தேசிய மக்கள் சக்தி அரசு பொய் மற்றும் வெறுப்பை முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்தது. அரசின் உண்மைத் தன்மையை மக்கள் ஆறு மாத காலத்துக்குள் விளங்கிக் கொண்டார்கள். இதனால் அரசு 23 இலட்சம் வாக்குகளை இழந்தது. இதனால்தான் அரசு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அமோக வெற்றி பெறவில்லை.

கொழும்பு மாநகர சபையில் யார் ஆட்சி அமைப்பது என்பது இழுபறி நிலையில் உள்ளது. ஊழலை இல்லாதொழிப்பதாகக் குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசு உறுப்பினர்களை விலைக்கு வாங்கி கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைக்க முயற்சிக்கின்றது.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய எதிர்க் கட்சிகளின் ஆதரவைக் கோரியது. ஆனால், ஆட்சி அமைப்பதற்கான சிறந்த திட்டங்களை முன்வைக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் முன்மொழியும் மேயர் வேட்பாளருக்கு நாங்கள் ஆதரவு வழங்கப் போவதில்லை." - என்றார்.

---

## கொவிட் குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு, சிக்குன்குனியா மற்றும் கொவிட் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும், மக்கள் உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம்."

- இவ்வாறு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"நாட்டில் அதிகரித்துள்ள நோய் நிலைமைகள் தொடர்பில் சுகாதார அமைச்சால் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

டெங்கு, சிக்குன்குனியா மற்றும் கொவிட் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. தொற்று நோய் தடுப்புப் பிரிவுடன், மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனம் இணைந்து

07

# லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை

ஜுன்மாதத்திற்கானலிட்ரோசமையல்எரிவாயுவின் விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது என நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் காணப்பட்ட விலையிலேயே லிட்ரோ எரிவாயு சிலிண்டர் விற்பனை செய்யப்படும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இம்மாதத்திற்கான சமையல் எரிவாயுவின் விலைகள் மாற்றப்பட மாட்டாது என லாஃப் எரிவாயு நிறுவனமும் தெரிவித்துள்ளது.




## கொவிட் குறித்து...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இவை தொடர்பான தரவுகளை நாளாந்தம் சுகாதார அமைச்சின் ஊடாக ஊடகங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மக்களின் சுகாதாரப் பாதுகாப்புக்காக எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் தாமதமின்றி முன்னெடுப்போம். நோய் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு சுகாதார அமைச்சு மக்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்கும்.

எவ்வாறிருப்பினும் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவதும் அத்தியாவசியமானதாகும். உலகில் கொவிட் பரவல் வேகத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் நடைமுறைப்படுத்த வேண்டிய திட்டங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு அவதானத்துடன் இருக்கின்றது.

இதற்கு முன்னர் உலகளாவிய தொற்று நிலைமையின்போது செயற்பட்ட அனுபவம் சுகாதாரத்துறையினருக்குக் காணப்படுகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனம் அந்தந்த நாடுகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றது. எனவே, மக்கள் அநாவசியமாக அச்சமடையத் தேவையில்லை. அதேவேளை, இது தொடர்பில் கவனயீனமாகச் செயற்படவும் தேவையில்லை." – என்றார்.



# அசோக சேபால விளக்கமறியலில்

தலவாக்கலை லிந்துலை நகர சபையின் முன்னாள் தவிசாளர் அசோக சேபால எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நேற்று கைது செய்யப்பட்ட அவர், கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலை லிந்துலை நகர சபைக்கு சொந்தமான மாட்டிறைச்சி கடையை குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனு கோரலின் போது அதனை அதிகூடிய விலையில் கோரியவருக்கு வழங்காமல் ஆகக்குறைந்த விலையில் கோரியவருக்கு வழங்கியமை தொடர்பில் அசோக சேபால மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனூடாக அரசாங்கத்திற்கு 3,80,000 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

## செம்மணிப் புதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரியாலை, செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் ஒரு குழியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தப் புதைகுழியில் இருந்து நேற்று வரை 7 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்ற குழியில் நேற்று அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளில் 14 வயது மதிக்கத்தக்க சிறுமியின் எலும்புக்கூடும் காணப்படுகின்றது.

இங்கு அதிக மனித எலும்புக்கூடுகள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. வேறு இடங்களில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களே இங்கு எடுத்து வரப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

அதற்குச் சான்றாகப் புதைகுழியில் காணப்படும் எலும்புக்கூடுகள் ஓர் ஒழுங்கு முறையாகவோ அல்லது சாதாரணமாகவோ காணப்படவில்லை. உயிரிழந்தவர்களில் அதிகமானோர் அடித்தே கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

சுமார் 20 வருடங்களை அண்டிய காலப் பகுதியில் உயிரிழந்தவர்களின் எலும்புக்கூடுகளே இங்கு அடையாளம் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

NORTH WALL ENGINEERING
Building Futures, Engineering Excellence
Our Services
• Residential Construction
• Renovation & Remodeling
• Structural Engineering
• Interior Fit-outs
• Landscaping
• Commercial & Industrial Projects
• Architectural Planning & 3D Modeling
• Vaasthu & Energy-Efficient Layouts
• BOQ Assessment

CONTACT US
259, Temple Road, Nallur, Jaffna
0774002766 / 0777818208
build.northwalleng@gmail.com




# துறைமுகங்கள், விமான நிலையங்களில் பி.சி.ஆர். பரிசோதனை செய்யவேண்டும்

## இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

இந்தியா, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றின் பரவலைக் கருத்திற் கொண்டு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் தொற்றாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சிலாபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய, அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறான இடங்களில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் இலங்கையில் கொரோனா பரவலின் வேகம் அதிகரிக்கும் அபாயமுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்படுபவர்களிடமே பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் போன்ற இடங்களில் பீ.சீ.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஒத்திவைப்பு



அரசாங்கத்தினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சார சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை என உத்தரவிடக்கோரி, இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை எதிர்வரும் 6 ஆம் திகதி வரையில் உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த மனு ஏ.எச்.எம்.டி.நவாஸ், அர்ஜுன ஒபேசேகர மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய நீதியரசர்கள் அடங்கிய ஆயம் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

உத்தேச சட்டமூலத்தினூடாக இலங்கை மின்சார சபையை தனியார் மயப்படுத்துவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக, மனுதாரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன், சேவையாளர்களுக்கு நட்டஈட்டை செலுத்தி அவர்களின் சேவைகளை இறுதி செய்வது தொடர்பில் தெளிவான சரத்தொன்று மேற்படி சட்டமூலத்தில் குறிப்பிடப்படவில்லை எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்த சட்டமூலத்தின் சில சரத்துக்களினூடாக அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், மனுதாரர்கள் உயர்நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

எனவே, மேற்படி சட்டமூலத்தை நிறைவேற்றுவதாயின் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென உத்தரவிடுமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

இந்தநிலையில் சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் ஆயம் வழக்கை எதிர்வரும் 6 ஆம் திகதி வரையில் ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மக்கள் காதில் பூ!

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் சில உதிரித் தரப்புகளும் சேர்ந்து, அண்மைக் காலத்தில் உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி உருவாக்கிய தமிழ் தேசியப் பேரவையும், ஐந்து கட்சிகள் சேர்ந்த ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியும் கொள்கை இணக்கம் என்ற பெயரில் உடன்பாடு ஒன்றை நேற்று செய்து கொண்டிருக்கின்றன.

இது கொள்கைக்கான இணக்கமா அல்லது உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களைக் கைப்பற்றுவதற்காக மக்கள் முன் போடும் வேடமா என்பது அடுத்த 13-ஆம் தேதிக்குப் பின்னர் இந்த மாத முடிவுக்குள் பெரும்பாலும் தெளிவாகிவிடும் அல்லது அம்பலமாகி விடும்.

தேர்தலுக்கு முன்னர் கொள்கை ரீதியாக உடன்பட முடியாமல், தங்களுக்குள் மோசமாக ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்து, தூற்றி, வசை சேறு வாரி வீசி, முரண்பட்டு மோதி, வாக்கு வேட்டையில் களமாடியவர்கள், ஒற்றுமையாக நின்று மக்களிடம் வாக்கு கேட்க முடியாதவர்கள் தேர்தல் முடிவுகளின் பின்னர் கொள்கைகளுக்காக ஒன்றுபடுவது என்பது பெரும்பாலும் மக்கள் காதில் பூ சுற்றும் வேலைதான். தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையில் ஜனநாயக அட்சர கணித விளையாட்டில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் விவகாரங்களைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றும் கையாள்கையாக ஒன்று சேர்ந்து விட்டு, அதனை 'கொள்கை இணக்கம்' என்கிறார்கள். தமிழ் மக்கள் அவ்வளவு தூரம் அரசியல் புரியாத ஏமாளிகளோ, அரசியல் அறிவிலிகளோ அல்லர் என்பதை அவர்கள் மறக்காமல் இருப்பது நல்லது.

இதுவரை காலமும் தங்களை 24 கேரட் என்றும், மற்றவர்களை ஒன்றுக்கும் உதவா செப்பு என்றும் எள்ளிநகையாடியவர்கள், கிண்டல் பண்ணியவர்கள் இன்று 24 கரட்டை செம்பாக்கும் கொள்கைப் பிடிப்பில் இணைந்து இருக்கிறார்கள்.

2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த நல்லாட்சி அரசு முன்னெடுத்த அரசமைப்பு முயற்சியில் முழுதாகப் பங்குபற்றி, அதைக் கடைசி வரை முண்டு கொடுத்து கொண்டு சென்ற தரப்புகளில் ரெலோவும் புளொட்டும் பிரதான பங்காளிகள். அந்த அரசமைப்பு உருவாக்கத்தில் மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஆராய்து பரிந்துரைக்கும் உபகுழுவுக்குத் தலைமை வகித்து, அற்புதமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தவர் என்று பாராட்டு பெற்றவர் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன். அந்த அரசமைப்பு முன்னெடுக்கப்பட்ட காலத்தில் அதனோடு சேர்ந்தியங்கிய எந்தச்சமயத்திலும் அந்த அரசமைப்பு வரைவு ஒற்றையாட்சிக்கு உட்பட்டது என்று வாயைத் திறக்காத ரெலோவும் புளொட்டும் - அதனோடு சேர்ந்து பயணித்த அந்த இரு கட்சிகளும் - இப்போது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமாரையும் அவர் அணியையும் தாஜா செய்து வளைத்துப் போடுவதற்காக, அந்த அரசமைப்பு வரைவு ஒற்றையாட்சிக்கு உட்பட்டது, தமிழர் தேசத்தின் சுயாட்சிக்கு இடமளிக்காதது என்று கொள்கைக் குத்துக்கரணத்தோடு நேற்றைய ஒப்பந்தத்தில் இணைந்திருக்கின்றன.

இந்தக் கொள்கை உடன்படிக்கை மூலம் இலட்சிய பயணம் ஒன்றை ஆரம்பித்து இருப்பதாக இதில் சம்பந்தப்பட்ட தரப்புகள் எல்லாம் கூறுவதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

உள்ளூராட்சி சபை நிர்வாகங்களை தத்தமது கட்சிகளுக்கு முடிந்தவரைக் கைப்பற்றிக் கொள்ளும் அரசியல் சுயலாபத்திற்காக - எண்ணிக்கை விளையாட்டுக்காக (Number game) - செய்யப்படுகின்ற இணக்கத்தை கொள்கை உடன்பாடு என்று மக்கள் காதில் பூச்சுற்றுவது நீண்ட காலத்துக்கு நின்று பிடிக்காது என்பது வெளிப்படையானது.



# டில்லியில் தமிழர்களின் வீடுகள் இடிப்பு: தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டி கண்டனம்

“தமிழ்நாட்டின் மக்கள் டில்லியில் புறக்கணிக்கப்படுவதையும், அவர்களது வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் எடுக்கப்படும் நடவடிக்கையும் கண்டனத் துக்குரிய செயலாகும். மதராசி கேம்ப் இடிப்புக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.”

– இவ்வாறு அக்கட்சியின் தலைவர் செல்வப்பெருந்தகை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“டில்லி, ஜங்புரா பகுதியில் உள்ள மதராசி கேம்ப் எனப்படும் குடிசைப் பகுதியில் தமிழர்களின் வீடுகள் நூற்றுக் கணக்கில் ஆக்கிரமிப்பு அகற்றம் என்ற பெயரில், நீதிமன்ற உத்தரவை மேற்கோளாகக் கொண்டு இடிக்கப்பட்டுள்ளன. இந்த செயலால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தங்களது குடியிருப்புகளை இழந்து, வீதிகளில் தங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை முற்றிலும் மனிதாபிமான தன்மைக்கு எதிரானது.

70 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வந்த மக்கள், தங்களது அடையாளம், உரிமை, இருப்பிடங்களை இழந்துவாழும் நிலையை தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டி சார்பில் வன்மையாக கண்டிக்கின்றேன். இந்த குடிசைப் பகுதி மக்கள் பெரும்பாலும் தினசரி கூலி, வீட்டு வேலை, தொழிலாளர் பணிகளில் ஈடுபட்டு வரும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களின் வாழ்க்கையை பாதுகாப்பதற்குப் பதிலாக, பொலிஸாரின் உதவியுடன் வீடுகள் இடிக்கப்படும் போது, அவர்களது குழந்தைகளின் கல்வி கேள்விக்குறியாகிறது. பெண்கள் பாதுகாப்பின்றி தண்ணீர், மின்சாரம் இல்லாமல் அவதிப்படுகிறார்கள்.

மத்திய அரசு மற்றும் டில்லி ஆளும் மாநில பா.ஜ.க. அரசு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த முழுமையான மறுசீரமைப்புத் திட்டத்தையும் வழங்கவில்லை என்பது வருத்தத்துக்குரியது. இங்கு ஆக்கிரமிப்பு அகற்றம் பற்றிய வரைமுறைகள் மீறப்பட்டுள்ளன. வெறும் நலத்திட்ட அடிப்படையில் வழங்கப்படும் வீடுகள் என்று கூறப்படுவது தவறானது. மக்கள் எந்தவிதமான தீர்வும், முன்னறிவிப்பும் இல்லாமல் இடம்பெயரச் செய்ய வைப்பது மிகப் பெரிய அநீதியாகும்.

வீடுகள் இடிப்பின் போது, 215 குடும்பங்களுக்கு, தற்போது இருக்கும் இடத்திலிருந்து மிகத் தொலைவான பகுதியான நரேலாவில் மாற்று குடியிருப்பு வழங்கப்பட்டதாகவும், மீதமுள்ள 155 குடும்பங்கள் எந்தவொரு மாற்று ஏற்பாடும் செய்து கொடுக்கவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், தமிழ்நாட்டிலிருந்து தங்களுடைய பிழைப்புக்காக டில்லிக்கு சென்றுள்ள தமிழர்களை பாதுகாப்பது மத்திய அரசின் பொறுப்பாகும்.

தமிழ்நாட்டின் மக்கள் டில்லியில் புறக்கணிக்கப்படுவதையும், அவர்களது மீதான வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் எடுக்கப்படும் நடவடிக்கையும் கண்டனத்துக்குரிய செயலாகும். இதுபோன்ற நடவடிக்கைகள் வரும் காலங்களில் நடைபெறாமல் தடுக்கும் வகையில் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# 4000 ஐ நெருங்கும் கொரோனா தொற்று: 24 மணி நேரத்தில் 4 பேர் உயிரிழப்பு



இந்தியாவில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி, 3,961 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்பால் 4 பேர் உயிரிழந்தனர்.

இந்தியாவில் நேற்று காலை நிலவரப்படி 3,961 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இந்தியா முழுவதும் 203 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல நேற்று முன்தினம் டில்லி, தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் தலா ஒருவர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டு ஜனவரி முதல் நாட்டில் ஒட்டுமொத்த கொரோனா இறப்புகள் 32 ஆக அதிகரித்துள்ளன.

தற்போது கேரளாவில் 1,435 பேரும், டில்லியில் 483 பேரும், மகாராஷ்டிராவில் 506 பேரும், மேற்கு வங்கத்தில் 331 பேரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா நிலைமை தொடர்பில் கருத்து தெரிவித்த மத்திய சுகாதாரம் மற்றும் ஆயுஷ் துறை இணையமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ்,

“எங்கள் மத்திய சுகாதாரத் துறை மற்றும் ஆயுஷ் அமைச்சகம் இரண்டும் முழுமையாக விழிப்புடன் உள்ளன. அனைத்து மாநிலங்களிலும் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன. அந்தந்த மாநில சுகாதாரம் மற்றும் ஆயுஷ் செயலாளர்கள் மற்றும் பிற சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் நாங்கள் பேசியுள்ளோம்.” என்றார்.

# போலந்து ஜனாதிபதித் தேர்தலில் கரோல் நவ்ரோக்கி வெற்றி பெற்றார்

போலந்தின் ஜனாதிபதித் தேர்தலில் தேசியவாத எதிர்க்கட்சி வேட்பாளர் கரோல் நவ்ரோக்கி மிகக் குறுகிய வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார் என்று அந்த நாட்டு தேசிய தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்ட நிலையில், எதிர்க் கட்சிகளின் ஆதரவுடன் கூடிய தீவிர பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த நவ்ரோக்கி, வார்சாவின் தாராளவாத மேயர் ரபால் ட்ர்சாஸ்கோவ்ஸ்கியை எதிர்த்து நடந்த இரண்டாம் சுற்றில் 50.89 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார்.

அதேநேரம், ரபால் ட்ர்சாஸ்கோவ்ஸ்கி 49.11 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

இதனிடையே போலந்தின் புதிய ஜனாதிபதியாக தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள நவ்ரோக்கி, போலந்து பிரதமர் டொனால்ட்



டஸ்கின் ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு திட்டத்தைத் தடுக்க தனது ஜனாதிபதி வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துவதைத் தொடர வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

# கொலராடோ பகுதியிலுள்ள வணிக வளாகத்தில் தீ வைப்பு

## பலர் காயம்

அமெரிக்கா – கொலராடோ பகுதியிலுள்ள வணிக வளாகத்தில் நபரொருவர் தீ வைத்ததில் பலர் காயமடைந்துள்ளனர்.

தீக்காயங்களுக்குள்ளான பொதுமக்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை அந்தநாட்டு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மேற்படி சம்பவம் இடம்பெற்ற போது இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலான ஆர்ப்பாட்டங்கள் அமைதியான முறையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.




# ரஷ்ய விமானப்படைத்தளம் மீது உக்ரைன் பாரிய ட்ரோன் தாக்குதல்

## செயற்கைகோள் படங்கள் வெளியாகின




ரஷ்ய விமானப்படைத்தளம் மீது உக்ரைன் நடத்திய பாரிய ட்ரோன் தாக்குதல் தொடர்பான செயற்கைகோள் படங்கள் வெளியாகி பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளன.

ஜூன் 1 ஆம் திகதி, உக்ரைன் படையினர் பாவுட்டினா (சிலந்தி வலை) என்ற பெரிய அளவிலான சிறப்பு நடவடிக்கையை ரஷ்யா மீது நடத்தினர்.

இந்த நடவடிக்கையின் போது, ரஷ்யாவின் பின்புறத்தில் உக்ரைனிய ட்ரோன்கள் மூலோபாய விமானங்களைத் தாக்கின. பெலாயாவை விமான நிலையத்தை தவிர , ஒலென்யா, டியாகிலெவோ மற்றும் இவானோவோ விமானத் தளங்களும் தாக்கப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது அழிக்கப்பட்ட ரஷ்ய விமானங்களின் மதிப்பிடப்பட்ட செலவு 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று உக்ரைனின் பாதுகாப்பு சேவை தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கையின் போது, முக்கிய ரஷ்ய விமானநிலையங்களில் உள்ள குரூஸ் ஏவுகணைகளில் 34 வீதம் அழிக்கப்பட்டதாகவும் அந்த சேவை வலியுறுத்தியது.

இதேவேளை, இந்த நடவடிக்கைக்கு 117 ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், அதற்கேற்ப எண்ணிக்கையிலான செயற்பாட்டாளர்கள் ஈடுபட்டனர் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம் பெயர் சட்டவாளர்.**

**இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.**



**ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.**

40

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தையிட்டி விகாரை

தையிட்டியில் உள்ளூராட்சி சபையின் அனுமதி எதுவும் பெற்றுக் கொள்ளாமல், விகாரையின் கட்டுமான பணிகள் நடைபெற்ற போது உள்ளூராட்சி சபை எதுவித சட்ட முஸ்திபுகளிலும் ஈடுபடவில்லை. தாங்கள் முன்னனின்று ஏதும் தொடங்கினால் உள்ளூராட்சி சபை அங்கத்தினர்கள், விகாரையின் கட்டுமானங்களுக்குப் பின்னல் இருந்த இராணுவ முகாமின் 'கவனத்துக்கு' உள்ளாகலாம் என்ற மனப்பயம் இருந்ததாகப் பேச்சுக்கள். இன்னொரு புறத்தில் அது நல்லாட்சி காலம், ஆதலால் இவற்றைத் தொட்டு ஆட்சிக்கு ஏன் சிரமம் தர வேண்டும் என விடயம் கிடப்பில் போடப்பட்டதாகவும் சபைக்கு எதிரே குற்றச்சாட்டுகள். புதிதாகப் பதவியேற்கும் அந்தப் பகுதியின் உள்ளூராட்சி சபை சட்டங்களின் அடிப்படையில், சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட விகாரையை நீக்க வேண்டும் என நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, சட்ட திட்டங்களுக்கு அமைய உத்தரவுகளைப் பெற்றால், அவை சட்டங்களுக்கு அமைய நிறுவப்படவில்லை என ஜனாதிபதி அதனை நீக்குவதற்கான உத்தரவுகளைப் பிறப்பிப்பாரா?

ஜே.வி.பியின் பிடியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தானே ஜே.வி.பியின் தலைவராக, மனத்தால் சிங்கள – பௌத்த மேலாண்மையை அரவணைப்பவர். சட்டத்துக்கு புறம்பாக அமைக்கப்பட்டாலும், அந்த விகாரையை அகற்றுவதற்கு உத்தரவு பிறப்பித்து, அது அவருக்கு பௌத்த மகா சங்கத்தினருடன் ஏற்படுத்தும் விளைவுகளுக்குத் தாக்குப் பிடிக்க விரும்புவரா? அல்லது இடையில் புகும் காணி அதிகாரிகள், விகாரை தற்சமயம் இராணுவத்தினரின் பராமரிப்பிலிருந்து பௌத்த சங்கத்தின் மேற்பார்வைக்கு மாற்றப்பட்டதால், அந்தக் காணிகளை பௌத்தத்தின் மேம்பாட்டுக்கு அரசுடமையாக்கும் வர்த்தமானியை வெளியிடுவரா? இந்தச் சூழ்நிலைகளில் விகாரையை உடைத்தே தீர வேண்டுமென ஆர்ப்பாட்டம் செய்யும் தமிழ் தேசிய அரசியல் பரப்பு, இந்தியாவிலிருந்த பாபர் மசூதியை இடிப்பதற்கு அங்கு வாழ்ந்த மக்களை உசுப்பேற்றிய இந்துமதக் கட்டமைப்புக்கள் அதற்கு ஆதரவும் பெற்று, அதனை இடித்தமை போலான ஆதரவுகளை மக்களிடையே கொண்டிருக்கிறார்களா?



சிறிதரன் எம்.பி.

அன்றில் வெறும் வீராப்பா? அப்படியானால் இந்த ஆர்ப்பாட்ட வீராப்புகளும் வாய்ச்சவடால்களும் மக்களுக்கு என்ன விளைவுகளைத் தரும்?

இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்ட தமிழரசுக் கட்சியின் தேர்தலில் தெரிவான தலைவர்

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

சிறிதரன் “இது அடக்கு முறையின் சின்னமாக, காணி உரிமையாளர்களினதோ மக்களினதோ உணர்வுகளுக்கு எதுவித மதிப்பு, மரியாதையோ இன்றி, சட்டங்களுக்கும் எதுவிதக் கணக்கெடுப்பு மின்றி, அதிகாரங்களை உன்மத்தமாக் நிறுவும் செயல். அதனை அகற்றுவதே முன்வைக்கப்படும் கோரிக்கை. தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை கள் இப்படி தொடர்வதின் சிந்தனைகளின் வெளிப் பாடு என்ற ரீதியில் கவனிக்கப்பட வேண்டும்.” – என்கிறார்.

ஆனால் தேசிய மக்கள் சக்தியோ இவற்றை யெல்லாம் நல்லிணக்கத்தின் பெயரில் சம்பந் தப்பட்ட மக்களே தீர்த்துக் கொள்வார்கள், அரசி யல் தலையீடு கூடாது என்று குறிப்பிட, தையிட்டி விகாரை நாளொரு மேனியும் பொழுதும் சிங்கள – பௌத்த வழிபாட்டு மக்களை பாதுகாப்பாக வந்து செல்ல வைக்கிறது.

இந்த விகாரையைச் சூழ்ந்திருக்கும் உணர்ச்சி கொதிப்புகள், சமயோசிதமான வழிகளில் விளைவு களைக் கணித்து முன்னெடுக்கப்பட வேண்டியவை. ஏனெனில் நடப்புக்களில் விகாரையின் இருப்பை உறுதிப்படுத்துவதே ராணுவத்தின் நோக்கம் என்ப




உடைக்கப்பட்ட டி.ஏ.ராஜக்ஷவின் சிலை மீளமைக்கப்பட்டது.

தால் அரசு அதற்கு துணை சென்று எதிர்ப்பவர்கள் துவம்சத்துக்கு ஆளாக்கப்படுவார்கள்.இதில் செலுத் தப்படும் நேரங்களோடு, எல்லா அரசியல் பரப்பு களும் நாடு கடந்து தமிழகத்தில் முகாம்களில் தங்கி இருக்கும் ஏதிலிகள் உடனடியாக நாட்டிற்குத் திருப்பி அழைக்கப்பட்டு, அவர்களது பூர்வீகப் பகுதிகளில் குடியமர்த்தப்பட வேண்டும் என்ற அழுத்தங்களுக் குத் தேவையான முன்னெடுப்புகளைச் செய்ய லாம்.

இந்திய ஒப்பந்தத்தின் சரத்துக்களை இந தியா நடைமுறைப்படுத்த வேண்டும் எனத் தரப் படும் அழுத்தங்கள் புலம்பெயரிலும், நாட்டிலும், தமிழ் தரப்புகளின் நேச சக்திகளுடன் தமிழ்நாடு, இந்தியாவில் பரவலாக நடைபெறுவதும், அவர்கள் தங்களது முன்னைய இடங்களில் குடியேறு



ராஜபக்ஷக்களின் பெற்றோரின் நினைவுத் தூபிகள் முன்னரும் பின்னரும்

வதும் கூட காணிகள் அடாத்தாக கையகப்படுத்து வதற்குச் சவாலாக இருக்கும். இவை ஒப்புக்கு என்று இல்லாமல் பாசப்பிணைப்பில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் நடத்துவது போல் தொடர் போராட்டமாக இருக்க வேண்டும்.

ஆக, இவையெல்லாம் தையிட்டியில், அடுப்பில் வேகும் போது, சிங்கள மக்களின் அடிமட்ட கீழ்த்தர உணர்வுகளை அரசியலுக்காக தூண்டும் விதத் தில் நாடாளுமன்றத்தின் முன்னைய உதவி சபா நாயகர் அஜித் ராஜபக்ஷ, முன்னைய ஜனாதிபதி மஹிந்தாவின் பூதவுடல் ரஷ்யாவின் லெனின், சீனாவின் மா சே துங், வடகொரியாவின் கிம் இல் சுங் போன்று நிரந்தரமாக மக்களின் மரியாதை களுக்காக பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கருத்து வைக்கிறார். மூன்று தசாப்தங்களாக வெல்லப்பட முடியாது இருந்த தமிழ் மக்களின் விடுதலைப் போரை, பிரபாகரனையும் அழித்து, தமிழ் மக்க ளின் அபிலாசைகளை வைக்க வேண்டிய இடத்தில் வைத்தவர் மஹிந்தர். ஆகவே அவருக்கு இந்த கௌரவம் தகுதியானது என்பது அவரது வாதம்.

அறகலயவின் முடிவில் எழுந்த மக்களின் வன்முறை அம்பாந்தோட்டையில் இருந்த மஹிந்த வின் பெற்றோர்களது நினைவுச் சின்னத்தையும், அவரது பூர்வீக வீட்டையும், சகோதரர்களின் சொத் துக்களையும் சீரழித்துச் சூறையாடியது. மஹிந்த வும், அவரது சகோதரர்களும், குடும்பங்களும்தான் நாட்டில் ஊழல் நிறைந்த ஆட்சிக்குக் காரணம் என்பது மக்களின் பரவலான எண்ணம். மஹிந்த வின் ஆதரவாளர்கள் எவ்வளவுதான் அவர் தேசத்தை உருவாக்கியவர் எனப் பீற்றினாலும் அவரது ஊழல் ஆட்சியின் பெறுபேறுகளை மக்கள் மறக்கவில்லை. எனினும் இந்தத் தம்பட்டங்கள் யாவும், தேசிய மக்கள் சக்தி இனப் பிரச்சி னைக்கு எதுவும் தீர்வை முன்னெடுத்தாலோ, அன்றில் தேர்தல் பிரசாரங்களில் கூறியவாறு 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கும் பட்சத்திலோ பழைய படி இனவாதத்தைத் தூண்டி பேரினவாதிகளின் துணையுடன் அவற்றைப் பாழாக்கி அதில் அரசி யல் மீட்சி பெறுவதே நோக்கம்.

தமிழர்களின் தேசிய அரசியல் கட்சிகளின் பரப்பில் தற்சமயம் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் சர்வதேச பரப்பின் ஊடாக, ஐக்கிய நாடுகள் சபையில் எடுக்கப்படும் விசாரணைகள் ‘இனப் படுகொலை’ என்ற பரபரப்பில் நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் பரிகாரநீதி தமிழ் மக்களுக்கு

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற அவரது கூற்றுக்கு, அவருக்கு உள்நோக்கங்கள் உண்டு என்ற வாதங்கள் வைக்கப்படுவதைப் பார்க்கலாம்.

அவரது பார்வைகள் சரியா, பிழையா என்பதைப் பார்ப்பது இந்தக் கட்டுரைக்குத் தேவையற்றது. ‘காலைக்கதிர்’ பத்திரிகையில் சில வருடங்களுக்கு முன் எழுதிய ‘இனப்படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்’ என்ற நீண்ட தொடரில் விளக்கமளித்தவற்றைப் பார்த்தால் அரசியல் தேவைகளுக்கான எலிக்காய்ச்சல்கள் இவை.



ராஜபக்ஷ சகோதரர்கள்

சர்வதேசத்தின் எந்த ஒரு நாடும் தமிழ் மக்களுக்கு நடந்தது இனப்படுகொலை என ஏற்றுத் தீர்மானங்கள் மேற்கொண்டு, அதனை ஐக்கிய நாடுகள் சபையின் தீர்வுக்காக பிரேரிக்கவில்லை. கனடா அங்குள்ள புலம்பெயர் மக்களின் அழுத்தங்களினால் இனப்படுகொலை பற்றி விடயத்தில் பள்ளிக்கூடங்களில் இலங்கையில் நடந்த இனப்படுகொலையையும் பற்றிப் படிப்பிக்கலாம் என்ற ஒரு வாரத்தை ஒதுக்கியுள்ளது.

போர் நடந்த காலங்களில் இடம்பெற்றவை குறித்து கனடாவும் ஆஸ்திரேலியாவும், இடைப்பட்ட மக்கள் பாதுகாப்புக்காக வெளியேற்றப் பட வேண்டும் (right to protect) என்ற கோட்பாட்டை ஐக்கிய நாடுகள் சபையில் வலியுறுத்தியும், அதன் பிரகாரம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. கோட்டாபய ராஜபக்ஷ கடைசி நாட்களில் ஐ.நாவையே போர்ப் பகுதிகளில் இருந்து நிர்பந்தித்து வெளியேற்றி, சாட்சியங்கள் அற்ற போர் தான் தொடர்ந்து.

நடந்தவை இனக்கொலை என்பதற்கு சார்பான அபிப்பிராயங்கள் இருந்தாலும், ஐக்கிய நாடுகள் சபையில் இது இன்று வரைத் தீர்மானிக்கப்படவில்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் 51 வது சரத்தின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மன்றம் சம்பவ காலத்தில் நடந்த (இந்த திகதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன) எல்லா சம்பவங்களையும் அவை இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான செயற்பாடுகள், போர் குற்றங்கள், ஆக்கிரமிப்புக் குற்றங்கள் என்ற வரவிலக்கணங்களுக்கு அமையவே ஆராயும். அதில் போர் குற்றங்களுக்கானதும் மனித குலத்துக்கு எதிரானதுமான செயற்பாடுகளுக்கும் தெளிவான ஆதாரங்கள் இருப்பதால் அதனை முன்னெடுத்துச் செல்கிறது.

கனடாவின் புலம்பெயர் மக்கள் அதன் அரசுக்கு அதிகளவான அழுத்தங்களைத் தந்து இருந்தாலும், அரசாங்கம் இதுவரை சிறிலங்காவை குற்றவியல் நீதிமன்றுக்கு நேரடியாகப் பாரப்படுத்தும் (தென்னாபிரிக்கா, இஸ்ரேலை நிறுத்தியமைப் போல்) முனைப்புகளை எடுக்கவில்லை.

இலட்சியத்திற்குப் பிடிவாதம் இருக்க வேண்டும். ஆனால் பிடிவாதமே இலட்சியமானால் வேதனைகள்தான் மிஞ்சும். இப்படியான பிடிவாத அரசியல் போக்குகளால் நடந்து போன வேதனைகள் விளைந்தன, அவற்றை தமிழ் மக்களது துரதிஷ்டம் என்பதா? அன்றில் விதி என்று கூறுவதா?

அதே அரசியல் நிலைகள் தொடரும்போது, ‘இனப்படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்’ என்ற தொடரில் குறித்தவற்றை மீள பதியலாம் என்று கருதுகிறேன்.

“ஆனால் எங்களுடைய ஏகோபித்த தலைமை தேடி அதனை அரசியல் ஆக்கினோம். அரசியலில் நெடுநாள் நண்பர்களும் இல்லை, எதிரிகளும் இல்லை. இந்திரா காந்தியும், இந்திய ஒப்பந்தமும், பின்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இந்தியாவின் வகிபாகமும் அதனைத்தான் சொல்கின்றன.

ஊடகவியலாளர் லஸந்த விக்ரமதுங்க கொல்லப்படும் முன் ஜனாதிபதி மஹிந்தாவுக்கு ‘தான் கொல்லப்படுவார் என்றும், கொல்பவர்கள் யார் என்று உனக்குத் தெரியும் எனவும்’ முன்னரே எழுதினார். ஆயினும் அதே முடிவைத்தான் கண்டார்.

அதே நிலைமை இன்னும் ஒரு தமிழ் ஊடகவியலாளரான வித்தியாதாரனைத் தேடி வந்தது. விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி மஹிந்தவினால் தூது போகக் கேட்கப்பட்டவர். ஆனால் சகோதரர் கோட்டாபயவினால் மேலுலகம் அனுப்பக் கடத்தப்பட்டு, தெய்வாதீனமாக உயிர் தப்பினார். அவர் இன்றும் மஹிந்தவுடன் அருகில் இருந்து காப்பி பருகி, ஊடக தர்மத்தில் செய்திகள் பரிமாறுகிறார்.

ஆனால் மஹிந்த சகோதரர்கள் நடத்திய விடுதலைப் புலிகளின் வேட்டையில், அதிகாரத்திற்காக அவர்களது பந்த பாசங்கள் முன் நின்றனவே ஒழிய, நட்புக்கள் பண்புகள் எவையும் கணக்கெடுக்கப்படவில்லை. தந்திரங்கள் கையாளப்பட்டன. அதில் இந்தியாவும் அடக்கப்பட்டது. அதனை மீறி, சர்வதேசம் இல்லை என்பது மஹிந்தவினதும் சகோதரர்களினதும் கணிப்பு

தமிழ் மக்கள் தங்களது சிறிய வயதிலேயே படித்த ஒரு நீதிக்கதைதான். உலகத்தை முதலாகச் சுற்றி வருபவருக்கு மாம்பழம் தருவதாக பார்வதி தேவி சொல்ல, முருகன் மயிலேறி வானம் எல்லாம் பறந்து வர, சிவனையும் பார்வதியையும் சுற்றி வந்து, ‘இதுதான் எனது உலகம்’ என்று கணபதியார் அதனைப் பெற்றார். தமிழ் மக்கள் மற்ற சர்வதேசங்களிடம் தேட, அவர்களது நீதிக் கதையிலேயே தேர்ச்சி பெற்றார் மஹிந்தர்.

நாங்கள் தமிழ் மக்கள், அறிவிருந்தும் சாத்திரம் சொல்லுகிற பல்லி கூழ்பானைக்குள் விழுந்த மாதிரி, ஓல்மிட்டோம். இந்தியா வளர்ந்து வரும்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**தொடர்ச்சி▲**

வல்லரசாக இந்திய கடற்பிராந்தியத்தில் தனது ஆளுமையை நிலைநிறுத்த, தனக்கு எதிராக உருவாகிக் கொண்டிருந்த சில அலைகளை மேவிக்கொண்டு போவதற்கான வழிவகைகளைப் பார்த்தது. அதற்காக அமெரிக்காவுடன் அது கைகோர்த்தது.

தமிழ் மக்களை ஒட்டி அதற்குக் கரிசனையும் அக்கறையும் இருந்தாலும், தொப்புள் கொடி உறவாக இந்திய மத்திய அரசு அவர்களைப் பார்க்கவில்லை. தாயும் தனயனும் என்றாலும், வாயும் வயிறும் வேறென்று கணித்துத்தான் அது நடந்தது.

ஒன்று மாத்திரம் தெளிவாகத் தெரிந்தது. விடுதலைப் புலிகள் ஆயுத பலத்தால் தாம் நடத்தியே காட்டுவோம் என்று உயிர்ப் பலிகளாலும், உயிர்த் தியாகங்களாலும், உணர்ச்சி ஊட்டி, படமிட்டு வளர்த்த தனித் தமிழ் ஈழம் என்ற கொள்கைப் பாட்டில், அவர்களோடு அரசியல் பேச இந்தியா தயாராக இருக்கவில்லை. இந்தியா திம்புவில் மிகத் தெளிவான மாற்றான, ஓர் அமைப்பை அரசியல் தீர்வாக, ஒரு வல்லரசாக, அது வரைந்தது. அதற்கு எதிரான ஒரு வளர்ச்சியை இந்தியா ஆதரித்து ஏற்க விரும்பவில்லை. அதனைக் கிள்ளிவிட கணக்கெடுத்திருந்தனர். ராஜபக்ஷக்கள் போருக்கும், விடுதலை புலிகளின் அழிவுக்கும் வகிபாகம் இந்தியாவே என்று தந்திரமாகக் கூழைக் கும்பிடு போட்டார்கள். தமிழ் மக்கள் எதுக்கும் தங்களது முகங்களை கூட கழுவுவதற்கு விரும்பவில்லை.

இவற்றிலிருந்து தமிழ் மக்கள் இனியாவது தங்களுக்கான பாதைகளை வகுத்துக் கொள்ள வேண்டும்."

ஆனால் தமிழ் மக்கள், போர் முடிந்த இந்த 16 வருட காலங்களிலும் அதே பாதைகளில் ஆயுத பலமும் இன்றி, முழுமையான அனுசரணை நாடொன்றை இந்தியக் கடற்பிராந்தியத்தில் அவர்களை மீறி எதனையும் சாதிக்கக் கூடியவர்களாக அரவணைத்துக் கொள்ளவில்லை. இந்தியாவுடனும் உறவை சீர்திருத்தி கொள்ளவில்லை . ஆனால் பதவிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தியோ, இடதுசாரி தத்துவங்களில் தங்களுக்கு ஆதரவு தரக்கூடிய, இந்தியப் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு எதிராக பலப் பரீட்சையில் இறங்கக்கூடிய சீனாவுடன் நட்பை கொண்டு இருந்தாலும், இந்தியாவுடன் அவர்களுக்கு இருந்த பகைமையையும், 1987இல் நடத்திய வன்முறைகளையும் பின்தள்ளி பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

முன்னர் தமிழ் மக்கள் ஆயுதங்களால் தம்மை தாங்களே அழித்துக் கொண்டு இருந்தார்கள். பின்பு தாங்கள் புதிய கருத்துக்களும் எண்ணங்களும் பரிமாறுகிறோம் என்று கருத்தைப் பார்க்காமல் கருத்துச் சொல்பவர்களைத் தாக்கி, அவர்களை அழிக்கிறோம் என்று செயற்படுகிறார்கள். ஆகவே அவர்கள் மாறாதவரை அவர்களுக்காக எதுவும் மாறப்போவதில்லை.

இந்தப் பரிதாபமான நிலையில், தமிழ் மக்கள் புத்திசாலித்தனமானதும் யதார்த்தமானதுமான பாதையையும் நோக்கிப் போக, இவற்றை அரசியல்வாதிகளில் இருந்து வெளிஎடுத்து, புத்திஜீவிகள் குழாம் ஒன்றினை நாட்டிலும், புலம்பெயரிலும் இருந்து தேர்ந்தெடுத்து, அவர்கள் காட்டும் வழிகளில் பாதைகளை வகுத்து, பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும். இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், அதனை நாட்டிலிருந்து விரட்ட வேண்டும் என வெளிப்படையாக தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியுடன் எதார்த்தமாக பேச வேண்டும். இப்படியான ஒரு மாற்றம் வர முடியாவிட்டால், அரசியல் தரப்புக்குள்ளே ஒற்றுமையான, அன்றில் ஒத்த நடப்புகளுக்கு, மணி கட்டுவது முடியாத விடயமானால், எந்த தரப்பு அவர்களை எங்கே கொண்டு செல்லும்? ஒன்றையொன்று இழுத்து விழுத்தும் பரவணிப் பழக்கங்களில் (சிங்கள தரப்புகள் எப்படி ஒரு தீர்வினைக் குழப்புகின்றனவோ அதுபோல) அவையும் தங்களுடைய இருப்புக்காகக் குழப்பப்படும்.



கொல்லப்பட்ட ஊடகவியலாளர் லஸந்த விக்ரமதுங்க

சான்சோனி ஆணைக்குழுவின் முன் சமர்ப்பணங்களுக்கான நிர்ப்பந்தம் இருந்ததால் பல புத்திஜீவிகள் சுயாதீனமாக சேர்ந்து பணியாற்றினார்கள். ஆனால் 1983 ஆம் ஆண்டு கலவரங்கள் பலரைப் பாதித்து, அவர்களும் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானதாலும், அந்தத் தொடர்புகள் நிலையாகத் தொடரவில்லை. அத்தோடு உத்வேகத்தோடு புறப்பட்ட விடுதலைக் குழுக்களின் அரசியலும் கருத்து வேற்றுமைகளுக்காக துரோகிகள் என்ற முத்திரைகள் புலத்திலும் கூட தாராளமாகப் பாவிக்கப்பட்டதாலும் பலர் ஒதுங்கிக் கொண்டனர்.

உண்மைத்தனம் உண்டோ, இல்லையோ இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எல்லாப் பகுதிகளுடனும் நடத்தும் இணைவான, ஆரோக்கியமான பேச்சு வார்த்தைகளின் முடிவில் ஏற்படுத்தப்படும் அரசமைப்புச் சட்டம் ஆதாரமாகும் என ஜனாதிபதி அடிக்கடி பிரசாரப்படுத்துகிறார். அப்படியான பேச்சுவார்த்தைகளில் மணிகள் கட்டிக் கொள்ள விரும்பாத தமிழரின் தேசியக் கட்சிகள் பந்தியில் தாம் போன போக்கில் செல்லாது, ஒரு பொது நிலையைக் கொண்டுவர இந்த புத்திஜீவிகள் முன்வர வேண்டும்.

**(தொடரும்)**

# வவுணதீவில் அயல் வீட்டுக்காரர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர்

## ஒருவர் படுகாயம்; துப்பாகி சூடு நடத்தியவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வவுணதீவில் குடிதண்ணீர் பிரச்சினை காரணமாக பக்கத்து வீட்டுகாரர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலை இடம் பெற்றது. துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவரைத் தாங்கள் கைது செய்துள்ளமையுடன் துப்பாக்கி ஒன்றையும் மீட்டுள்ளனர் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

கன்னங்குடா, பாடசாலை வீதியைச் சேர்ந்த 28 வயதுடைய பாக்கியராசா சதீஸ்கரன் என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளளர்.

இதுபற்றி தெரியவருவதாவது

இச்சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டு இலக்காகிப் படுகாயமடைந்தவரின் வீட்டுக்கு அருகிலுள்ள அவரது சகோதரனின் காணியில் குடிதண்ணீருக்காக தேசிய நீர்வழங்கல் சபையினால் நீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தத்



தண்ணீரைப் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவரும், துப்பாக்கி பிரயயோகம் மேற்கொண்டவரும் பாவித்து வந்துள்ளனர். அதற்கான பணத்தை செலுத்தாத நிலையில் நீர் வழங்கல் சபையினால் நீர் விநியோக இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, நீரைப் பாவித்து வந்த பக்கத்து வீட்டுகாரரிடம், தண்ணீரைப் பாவித்து விட்டு ஏன் அதற்கான பணத்தை செலுத்த வில்லை எனக் கேட்ட போது இருவருக்கும் இடையே நேற்று மாலை 4.30 மணியளவில் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த நிலையில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாகியினால் பக்கத்து வீட்டுக்காரர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அவர் கால் தொடையில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார் என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இதனையடுத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட சின்னவன் என அழைக்கப்படும் அருளானந்தம் யோகேஸ்வரன் என்பவரை பொலிஸார் கைது செய்தமையுடன் துப்பாக்கி ஒன்றையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# இந்து மதம் மீதான அடக்குமுறைகளை கண்டித்து திருமலையில் கவனவீர்ப்பு!

(ஹஸ்பர் ஏ.எச்., எஸ்.கீதபொன்கலன்)

வடக்கு கிழக்கில் மக்களின் காணி அபகரிப்பு மற்றும் இந்து ஆலயங்கள் மீதான அடக்குமுறையைக் கண்டித்து நேற்று மாலை திருகோணமலை சிவன் கோயிலுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது. இதனை சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

"கோயில் நிலங்களை அபகரிக்காதே!", "பறிக்காதே, பறிக்காதே, வாழ்வாதார நிலங்களைப் பறிக்காதே!", "அரசே சைவமத வழிபாட்டு உரிமையை உறுதிப்படுத்துக!", "வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்" உள்ளிட்ட பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.





# இன்றைய ராசி பலன்கள் - 03.06.2025




இன்று அதிர்ஷ்டம் காணப்படும் நாள். திருப்திகரமான பலன்கள் கிடைக்கும் சாதகமான நாள். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

பணியில் உங்கள் நேர்மை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணியில் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நம்பிக்கை ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இதனால் உங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்.




இன்று எதிர்பாராத வரவுகளும் வெற்றியும் கிடைக்கும் நாள். புத்திசாலித்தனத்தை பயன் படுத்துவதன் மூலம் அதிகம் சாதிக்கலாம்.

பணியில் உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறித்த நேரத்துக்கு முன்பே பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

நீங்கள் உங்கள் துணையிடம் சந்தோஷமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சீராக இருக்கும். காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு கண்டு மகிழ்வீர்கள்.

உங்களின் ஆற்றல் மற்றும் திடமான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கவனமாகக் கையாள வேண்டிய கடினமான சூழ்நிலைகள் காணப்படும். இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது சில போராட்டங்களை சந்திப்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை நீங்கள் சந்திப்பீர்கள். இதனால் அவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை அவ்வளவு திருப்திகரமாக காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும்.




இன்று திருப்திகரமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை திட்டமிட்டு திறமையாக நடத்த வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிகள் கடோயாக யாருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத நிலை இருக்கும். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும்.

மன நிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவு காண இயலாது. உறவில் நல்லிணக்கம் காண அமைதியான போக்கைக் மேற்கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் சாதகமான நாள். கடின உழைப்பு மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் லாபகரமான பலன்கள் கிடைக்கும். இது உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

நீங்கள் இன்று கடினமான பணிகளையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று பணம் சேர்ப்பதற்கானஅதிர்ஷ்ட நிலை உள்ளது. இதனால் உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி உங்கள் முயற்சிகளில் வெற்றி காணலாம். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சியான் நாள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதன் மூலம் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். பயணம் காணப்படுகின்றது. இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு வரும் பண வரவு வரப்பிரசாதமாக அமையும். எதிர்கால பாதுகாப்பிற்காக உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். சாதகமான பலன்கள் கிடைக்க கடினமான சூழ்நிலைகளை கவனமாக கையாள வேண்டும். இசை கேட்டல் மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை மீண்டும் சரிபார்த்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

தகவல் தொடர்பில் காணப்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் பாதிப்பு ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். முடிவுகளை விரைந்து எடுப்பீர்கள். இதனால் பிரச்சினை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். உங்கள உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் சிறந்த பலனைக் காணலாம்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும். சக பணியாளர்களிடமிருந்து சில தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.06.2025




உங்கள் வளர்ச்சிக்கு உதவும் முயற்சிகளை எடுக்க இன்றைய நாள் சாதகமாக உள்ளது. உங்கள் இலக்குகள் நிறைவேறும். திருப்தியும் நல்ல உணர்வும் உங்களிடம் இன்று காணப்படும்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு திருப்தி அளிக்கும். சாதித்தது போன்ற உணர்வு உங்களிடம் காணப்படும். எனவே நீங்கள் சிறப்பாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதற்கு உகந்த நாள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் வளரும்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பண வரவு ஏற்பட்டு பணம் சேர்க்க இயலும்.




இன்று சீரான பலன்கள் கிடைக்காது. சவால்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். நீங்கள் பொறுமையுடனும் திறமையுடனும் இதனைக் கையாள வேண்டும். தான தருமங்கள் போன்ற தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறலாம்.

சக பணியாளர்களுடன் சில அசௌகரியங்களை உணர்வீர்கள். இம்மாதிரியான அற்ப விஷயங்களை தவிர்த்து உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது இன்று அவசியம்.

இன்று உங்கள் துணையுடன் பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது.

இன்று கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் ஏற்படும் அதிகப்படி செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.




இன்று குழப்பங்களும் வருத்தமான மன நிலையும் காணப்படும். இன்றைய நாளை சமாளிக்க நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படுவதால் நீங்கள் மும்மரமாக பணியில் ஈடுபட்டிருப்பீர்கள். சக பணியாளர்களின் எதிர்ப்பை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும். சிறப்பாக பணியாற்ற பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே சூடான விவாதங்கள் ஏற்படும். இதனை தவிர்க்க நீங்கள் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

நிதி வளர்ச்சியில் தடைகள் காணப்படும். கையிலிருக்கும் பணத்தை சேமிக்க வேண்டியது அவசியம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. பொறுமையுடன் இருந்தால் பல நன்மைகளைக் காணலாம். வெறுமை இருப்பது போன்ற உணர்வு காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த சூழ்நிலையை சமாளித்து அமைதி பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும். இன்று நீங்கள் திட்டமிட்டு பணியாற்றுவது மிகவும் அவசியம்.

உங்கள் துணையுடன் சகஜமாக இருக்க வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தக்க வைக்க முடியும்.

நிதி விஷயங்களில் விரும்பும் பலன்கள் கிடைக்காது. உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். எனவே திட்டமிட்டு பணத்தை கையாள வேண்டும்.



# மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி நேற்று பதவியேற்பு

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின் புதிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்றுக் காலை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இதுவரை காலமும் கடமையாற்றிய பொறுப்பதிகாரி ஜெயந்த குணதிலக அநுராதபுரம் கஹாட்டகஸ்திகிலிய பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று சென்ற நிலையில் குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இ.எஸ்.அபயசேகர நேற்றுக் காலை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

முன்னதாக மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் மானிப்பாய் பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் பொலிஸாரால் பொலிஸ் மரியாதையுடன் அவர் வரவேற்கபட்டு தனது கடமைகளைப் பொறுப்பேற்றார் .